


# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் ஐப்பசி 24 | MAALAI EXPRESS | ஹிஜிரி 1446 ஜமாதுல் அவ்வல் 7

மாநிலம் பயனுற!




• புதுச்சேரி • ஞாயிற்றுக்கிழமை, நவம்பர் 10, 2024 • வெளியீடு: 11-11-2024, திங்கள்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 • Volume - 10 • Issue - 123 • 6 பக்கம் • ரூ.6



## மூத்த நடிகர் டெல்லி கணேஷ் காலமானார்

**சென்னை, நவ. 10–**

வயது முதிர்வு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக நடிகர் டெல்லி கணேஷ் (80) இன்று காலமானார். சென்னை ராமாபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் அவரது உயிர் பிரிந்தது. டெல்லி கணேஷின் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக அவரது வீட்டில் வைக்கப்பட்டுள்ளது. டெல்லி கணேஷின் மறைவுக்கு திரைத்துறையை சேர்ந்த பலரும் சமூக வலைதளங்களில் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

நாடக நடிகராக இருந்து தமிழ் திரையுலகில் வில்லன் மற்றும் குணச்சித்திர கதாபாத்திரங்களில் டெல்லி கணேஷ் கோலோச்சியுள்ளார். டப்பிங் கலைஞராகவும் சிறந்து விளங்கி வந்தார். தூத்துக்குடியில் பிறந்த இவர் தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளிலும் நடித்துள்ளார். டெல்லி கணேஷ். நகைச்சுவை, குணச்சித்திரம் உள்ளிட்ட பல்வேறு கதாபாத்திரங்களில் திறம்பட நடித்தவர்

டெல்லி கணேஷ் 1976ல் திரைத்துறைக்கு வந்தார். இவர் தக்ஷிண பாரத நாடக சபா (DBNS) எனப்படும் 'டெல்லி' நாடகக் குழுவில் ஒரு உறுப்பினராக இருந்தார். படங்களில் நடிப்பதற்கு முன் 1964 முதல் 1974 வரை இந்திய விமானப் படையில் டெல்லி கணேஷ் பணியாற்றினார்.

டெல்லி கணேஷ் நடித்து வெளியான முதல் திரைப்படம் பட்டினப்பிரவேசம் (1977), தமிழ் திரையுலகுக்கு இவரை இயக்குனர் கே. பாலசந்தர் தான் அறிமுகம் செய்தார். டெல்லி கணேஷ் நடித்த பெரும்பாலான கதாபாத்திரங்களில் துணை நடிகர் அல்லது நகைச்சுவை நடிகர் வேடங்களே இருந்தது. ஆனால் அபூர்வ சகோதரர்கள் (கதாபாத்திரம் பிரான்சிஸ்) போன்ற சில படங்களில் வில்லனாகவும் நடித்து கவனம் ஈர்த்தார். சிந்து பைரவி, நாயகன், மைக்கேல் மதன காமராஜன், அபூர்வ சகோதரர்கள், ஆஹா, தெனாலி, சங்கமம், அவ்வை சண்முகி, இந்தியன் 2 உள்பட 400க்கும் மேற்பட்ட படங்களில் நடித்து கவனம் ஈர்த்தவர். டெல்லி கணேஷ் இதுவரை 8 முக்கிய சின்னத்திரை தொடர்களில் நடித்துள்ளார். 1979ம் ஆண்டு பசி திரைப்படத்திற்கு "தமிழ்நாடு மாநில அரசின் சிறந்த நடிகருக்கான விருதை பெற்றுள்ளார். அதோடு, 1993 1994ம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில அரசின் "கலைமாமணி விருது"ம் டெல்லி கணேஷ் பெற்றுள்ளார்.

## அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

# பெருந்தலைவர் காமராஜரை நமக்கு வழங்கியது "விருதுநகர் மண்"

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்

**விருதுநகர், நவ. 10–**

2 நாள் சுற்றுப்பயணமாக விருதுநகர் சென்றுள்ள முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், அங்கு ரூ.77 கோடியில் 6 தளங்களுடன் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள கலெக்டர் அலுவலக புதிய கட்டிடத்தை இன்று திறந்து வைத்து பார்வையிட்டார்.

இதனையடுத்து நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் காட்சி கூடத்தை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார் பின்னர் வெம்பக்கோட்டை அகழாய்வு தொல்பொருட்கள் அரங்கம் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்தார். அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்கள் குறித்து அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம் அளித்தார்.

இதனைத்தொடர்ந்து விருதுநகரில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பேசிய முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், "பெருந்தலைவர் காமராஜரை நமக்கு வழங்கிய மண் விருதுநகர். பெருந்தலைவர் காமராஜரின் மறைவின் போது, அவரது மகன் மாதிரி அவருடைய இறுதி நிகழ்ச்சிகளை நடத்தியவர் மறைந்த முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதி. எனது திருமணத்திற்கு வந்து காமராஜர் வாழ்த்தியதை மறக்க முடியாது. விருதுநகர் என்றதும் அனைவரின் எண்ணத்திலும் வருபவர் சங்கரலிங்கனார்.



விருதுநகரில் 95 சதவிதத்திற்கும் மேல் பிளஸ் 2 மாணவர்கள் உயர்கல்வியில் சேர்க்கப் பட்டுள்ளனர். அதிகளவில் உயர்கல்வி சேர்க்கை நடைபெறுவது முக்கிய சாதனை.

பட்டாசு தொழிற்சாலை விபத்தில் உயிரிழக்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உயர்கல்வி வரை அனைத்துச் செலவையும் அரசே ஏற்கும். இதற்கென்று புதிய நிதியம் உருவாக்கப்பட்டு, முதல்கட்டமாக ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு நீர்நிலைகள் ரூ.41 கோடி செலவில் மேம்படுத்தப்படும். காளிங்கபேரி, வெம்பக்கோட்டை அணைகள் மேம்படுத்தப்படும். காரியாபட்டி தெற்கு ஆற்றில் புதிய அணை கட்டப்படும். அருப்புக்கோட்டை அருகே ரூ.350 கோடியில் புதிய சிப்காட் அமைக்கப்படும். கவுசிகா ஆறு, கஞ்சம்பட்டி கண்மாய் சீரமைக்கப்படும்.

சிவகாசியில் ரூ.18 கோடியில் மாநாட்டு கூட்டரங்கம் அமைக்கப்படும். விருதுநகரில் ரூ.25 கோடி செலவில் சாலைகள் மேம்படுத்தப்படும்.

வீடற்ற ஏழைகளுக்கு இலவச வீட்டு மனைகள் வழங்க உத்தரவிட்டுள்ளேன். 3 ஆண்டுகளில் 10 லட்சத்திற்கு மேற்பட்டோருக்கு இலவச வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தியாவின் சக்தி வாய்ந்த நபர்களின் பட்டியலில் என் பெயரையும் குறிப்பிட்டுள்ளார்கள். இதனால் இன்னும் வேகமாக ஓட வேண்டும் என்றே நினைக்கிறேன்" என்று கூறினார்.

பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியை விமர்சனம் செய்து பேசிய முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், "மக்கள் நலத் திட்டங்களுக்கு மூலதன செலவுகளை செய்யவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறுகிறார். ஒருவர் பொய் சொல்லலாம். ஆனால் ஏக்கர் கணக்கில் பொய் சொல்லக் கூடாது. ஆனால் இனி பழனிசாமி அளவிற்கு பொய் சொல்லக் கூடாது என்றுதான் சொல்ல வேண்டும். இப்படி பழமொழி சொல்லும் அளவிற்கு புளுகு மூட்டையை இபிஎஸ் அவிழ்த்துவிடுகிறார்.

உங்கள் ஆணவத்திற்காகவே தமிழ்நாட்டு மக்கள் உங்களை தோற்கடித்துக்கொண்டே இருப்பார்கள். மக்கள் நலத் திட்டங்களுக்கு கலைஞர் பெயரை வைக்காமல், பதவி சுகத்திற்காக கரப்பான்பூச்சியைப்போல ஊர்ந்து சென்ற உங்க பெயர வைக்க முடியுமா..?" என்று அவர் கூறினார்.



# வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி: தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு

**சென்னை, நவ. 10-**

தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி, இன்று இரவு காற்றழுத்த தாழ்வு பகுதியாக உருவாக வாய்ப்புகள் இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது, அதற்கடுத்த இரண்டு நாட்களில் மேற்கு திசையில், தமிழகம் இலங்கை கடலோரப்பகுதிகளை நோக்கி மெதுவாக நகரும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. இதன் காரணமாக, தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் வருகிற 15ந் தேதி வரையில் லேசான மழை பெய்யும். கடலோர தமிழகம், உள் தமிழகத்தில் நாளை (திங்கட்கிழமை) இடி, மின்னலுடன் லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளது. அதேநேரம், இன்று (ஞாயிற்றுக்கிழமை) தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# ஆஸ்திரேலியாவில் சட்டமன்ற பேரவை தலைவருக்கு வரவேற்பு



ஆஸ்திரேலியா, மெல்போர்ன் நகரில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அப்பாவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

# விநாயகா மிஷன் பல்கலைக்கழகத்தின் அலைடு ஹெல்த் சயின்ஸ் துறைக்கு விருது



**சேலம், நவ. 10-**

இந்திய அவசரகால மருத்துவ சங்கமானது (SEMI) இந்தியாவில் அவசரகால சுகாதார தரங்களை மேம்படுத்துதல், அவசரகால மருத்துவ துறை சார்ந்த கல்வி மற்றும் அறிவியல் செயல்பாடுகளை மேம்படுத்துதல், இதனை சார்ந்த விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்துதல் போன்றவற்றை நோக்கமாக கொண்டு செயல்பட்டு வரும் ஓர் அமைப்பாகும். இது ஆண்டுதோறும் பல்வேறு கருத்தரங்குகளையும், கல்வியியல் சார்ந்த மாநாடுகளையும் சர்வதேச மற்றும் தேசிய அளவில் நடத்தி கல்வியாளர்களையும், தொழிற்துறைகளையும் ஒன்றிணைத்து அவசரகால சிகிச்சை மருத்துவம் சார்ந்த பல்வேறு தரவுகளையும் முன்னிறுத்தும் ஓர் சிறந்த வழித்தடமாகவும் செயல்பட்டுவருகிறது.

இதனை முன்னிட்டு இவ்வாண்டிற்கான அவசரகால மருத்துவ சிகிச்சை சார்ந்த சர்வதேச கருத்தரங்கிணை சென்னையில் நடத்தியது. இக்கருத்தரங்கில் உலகின் பல்வேறு பகுதிகளை சரார்ந்த கல்வியாளர்கள், மருத்துவர்கள் அவசரகால மருத்துவ சிகிச்சை தொழிற்நுட்பவியலாளர்கள் என சுமார் 2500க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் விநாயகா மிஷன் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் டீன் பேராசிரியர் டாக்டர். செந்தில்குமார் சிறப்பு பேச்சாளராக அழைக்கப்பட்டு அவசரகால மருத்துவ சகிச்சை பிரிவின் வளர்ச்சி சார்ந்து சர்வதேச வல்லுநர்கள் மத்தியில் சிறப்புரையாற்றினர்.

மேலும் இந்நிகழ்வில் சேலம் விமஸ் மருத்துவமனை வளாகம், புதுச்சேரி ஆறுபடைவீடு மருத்துவகல்லூரி வளாகம், சென்னை ஆறுபடைவீடு தொழிற்நுட்ப கல்லூரி வளாகம் ஆகியவற்றில் அமைத்துள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் அவசரகால மருத்துவ சிகிச்சை பிரிவின் பாடநெறிகள், மருத்துவ பயிற்சிகள், கட்டமைப்பு, மாணவர்களுக்கான வேலைவாய்ப்பினை அளித்தல் போன்றவற்றின் அடிப்படையில் “இந்தியாவின் அவசரகால மருத்துவ சிகிச்சை தொழிற்நுட்பவியலாளர்களுக்கான மிகவும் நம்பகமான மதிப்புமிக்க நிறுவனம்‘ என்ற விருது ஷிணிவிமி அமைப்பின் மூலம் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் பல்வேறு கல்லூரிகள் பங்கேற்ற, இம்மாநாட்டில் விநாயகா மிஷன் அலைடு ஹெல்த் சயின்ஸ் துறைக்கு மட்டுமே இவ்விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவ்விருதினை பெறுவதற்கு சிறந்த பங்களிப்பாற்றிய துறையின் டீனுக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர். கணேசன் மற்றும் துணை தலைவர் டாக்டர் அனுராதா கணேசன், மற்றும் பேராசியர்கள் என அனைவரும் தங்களின் வாழ்த்தினை தெரிவித்தனர்.

# ரத்ததான முகாம் அமைப்பாளர்களுக்கு சான்றிதழ்


கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தேசிய தன்னார்வ ரத்ததான நாளினை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசு மருத்துவமனை ரத்த மையங்களுக்கு ரத்ததான முகாமினை அமைத்துக் கொடுத்த முகாம் அமைப்பாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசு வழங்கினார்.

# விளையாட்டு மைதானத்தில் ஆட்சியர் ஆய்வு


கடலூர், மஞ்சக்குப்பம் அறிஞர் அண்ணா விளையாட்டு மைதானத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அலுவலர் அசோக்.

# கோகோ விளையாட்டு வீராங்கனைகளுக்கு பாராட்டு


முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டியில் கோகோ பிரிவில் மாநில அளவில் மூன்றாவது இடம் பெற்ற கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த வீராங்கனைகளுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியம் பாராட்டு தெரிவித்தார்கள். உடன் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சுகிதா.

# பேரிளம் பெண்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கம்


தூத்துக்குடி அறிஞர் அண்ணா மஹாலில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் தமிழ்நாடு கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலவாரியம் சார்பில் கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள், பேரிளம் பெண்களுக்கான ஒருநாள் விழிப்புணர்வு கருத்தரங்கம் நிகழ்ச்சியை அமைச்சர் கீதா ஜீவன், மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்கள்.

# ரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்து ஆட்சியர் ஆய்வு


வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி கீ.வ.குப்பம் வட்டம், லத்தேரி திருமேனி இடையே ரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் ஒன்றியக்குழுத்தலைவர் ரவிசந்திரன்.

# கடற்கரை மேலாண்மை திட்டத்தை அமல்படுத்துவதற்கு முன்பு மீனவர்களிடம் கருத்து கேட்க வேண்டும்

## காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி., வலியுறுத்தல்



புதுச்சேரி, நவ. 10–

புதுவை காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் மீனவர் காங்கிரஸ் பிரிவு ஆலோசனை மற்றும் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது.

காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி., தலைமை வகித்தார். முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி மற்றும் மீனவர் பிரிவு நிர்வாகிகள் மற்றும் மீனவ கிராம பஞ்சாயத்து தலைவர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் மாநில காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி., பேசும்போது கூறியதாவது, புதுவை கடலோர மீனவ கிராமங்கள் கடல் அரிப்பில் அடித்து செல்லப்பட்டு வருகிறது. பிள்ளைச்சாவடியில் சுடுகாட்டைத் தாண்டி, கோவில் சுவற்றிற்கு வந்துள்ளது. இந்த அரசு கடல் அரிப்பை தடுக்க கடலில் கல் கொட்டுவதாக கூறி 2 ஆண்டு ஆகிறது. ஆனால், இதுவரை ஒரு கல் கூட கொட்டவில்லை. 11 முறை டெண்டர் விடும் யாரும் டெண்டர் எடுக்க வரவில்லை. நான் மீனவர்களிடம் பணத்தை கொடுங்கள், அவர்களே அவர்களுக்கு தேவையான கற்களை கொட்டி கொள்வர் என கூறினேன். ஆனால், அதனையும் ஆட்சியாளர்கள் செய்யவில்லை.

மீனவர் குடும்பம் 2, 3 என விரிவடைந்து வருகிறது. ஆனால் கடற்கரை மேலாண்மை வரைபடத்தில் எதிர்கால மீனவர்கள் வாழ்வதற்கு இடம் காண்பிக்கப்படவில்லை. மீனவர்கள் வாழும் இடத்திற்கு பாதுகாப்பு இல்லை. கடல் அரிப்பால் பயங்கர பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. வீராம்பட்டினத்தில் கல் கொட்டினால் வம்பாகீரப்பாளையமும், புதுச்சேரியில் கல் கொட்டினால் கோட்டகுப்பமும், கோட்டகுப்பத்தில் கல் கொட்டினால் காலாப்பட்டும் பாதிக்கப்படுகிறது.

வீராம்பட்டினத்தில் மீன்பிடி துறைமுக விரிவாக்க திட்டத்தை முதலமைச்சர் தொடங்கி வைத்தார். என்ன வசதி கிடைக்கும் என்று கேட்டால், உங்களுக்கு என்ன வேண்டுமோ அது கிடைக்கும் என்கிறார். அங்கு என்னென்ன வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளது என்று கூட கூறவில்லை. மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருவதற்கு அவர்களின் போராடும் குணம் விலகிப் போனது தான் காரணம். முன்பு கடலோர மீனவர்கள் தங்கள் பகுதியை தாண்டி காலாப்பட்டு இ.சி.ஆர்., சாலை, அரியாங்குப்பம், கன்னியகோவில் பகுதிகளுக்கு வந்து போராடுவார்கள். இப்போது அது போல் வருவதில்லை. கேட்டால் பஞ்சாயத்தார் ஒப்புக்கொள்ள மறுப்பதாக கூறுகின்றனர். உடன்படுபவர்களை பஞ்சாயத்தார்களாக போடுங்கள். மார்க்கெட்டில் வியாபாரம் செய்யும் பெண்களை பஞ்சாயத்து தலைவராக போட்டு, போராட்டத்தை வலுப்படுத்துங்கள். அப்போதுதான் மீனவர்கள் பிரச்சனை வெளியே தெரிந்து, தீர்வு காணப்படும். இல்லை என்றால் தெரியாது. டெல்லியில் இருந்து மத்திய அமைச்சர் ஆய்வு மற்றும் கருத்து கேட்க தேங்காய்திட்டு பகுதிக்கு வந்தார். அதற்கு பின்னரும் எதுவும் நடக்கவில்லை. கடற்கரை மேலாண்மை திட்டம் கொண்டு வந்தால் படகுகள் ஓட்டுவதற்கு உரிமம் வேண்டும்.

மீனவர்கள் பேசும் தமிழ் தெரியாத கடலோர காவல் படையினர் தான் விசாரணை நடத்துவர். அப்போது பாதிக்கப்படுவது மீனவர்கள் தான். எனவே, இச்சட்டத்தை கொண்டு வருவதற்கு முன்பு மீனவர்களிடம் கருத்து கேட்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வலுவான போராட்டத்தை நடத்துங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

# பொதிகை புத்தக கண்காட்சி ஆய்வு கூட்டம்



தென்காசி, நவ. 10–

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் 3வது பொதிகை புத்தக கண்காட்சி முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, 3வது பொதிகை புத்தக கண்காட்சி தென்காசி இ.சி.ஈஸ்வரன்பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 15.11.2024 முதல் 24.11.2024 வரை 10 நாட்கள் நடைபெறவுள்ளது. 15.11.2024 அன்று நடைபெறும் தொடக்க நிகழ்வில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்..ராமச்சந்திரன் புத்தகத் திருவிழாவை தொடங்கி வைத்து விழாப் பேருரை ஆற்றவுள்ளார்கள்.

மேற்படி, புத்தக கண்காட்சியில் தினசரி நிகழ்வாக காலையில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகளும் மாலையில் பல்வேறு தலைப்பில் பிரபல எழுத்தாளர்களின் சிறப்புரைகள், பட்டிமன்றங்கள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இன்றைய தினம் 3வது பொதிகை புத்தக கண்காட்சிக்கான அழைப்பிதழ், மற்றும் விளம்பர படம் ஆகியவற்றினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் வெளியிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வேணுகோபால், வருவாய் கோட்டாட்சியர்கள் லாவண்யா (தென்காசி) கவிதா, (சங்கரன்கோவில்), மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) மதி இந்திரா பிரியதர்ஷினி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அமிர்தலிங்கம், மாவட்ட சமூகநல அலுவலர் மதிவதனா, மாவட்ட நூலகர் சண்முகசுந்தரம், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரெஜினா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சண்முகசுந்தரம் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### 14ம் தேதி தருமபுரி வரும்

# பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் எம்பிக்கு சிறப்பான வரவேற்பு கொடுக்க வேண்டும்

## ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம்



தருமபுரி, நவ. 10–

தர்மபுரி கிழக்கு மாவட்ட பாமக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் கடத்தூரில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் கு.அல்லிமுத்து தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் ஆர். அரசாங்கம் வரவேற்றுப் பேசினார். இக்கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு உழவர் பேரியக்க மாநில செயலாளருமான இல.வேலுசாமி, மாநில இளைஞர் சங்க செயலாளர் பி.வி. செந்தில் ஆகியோர் கலந்துகொண்டு பேசினார்கள். இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வருகிற 14ம் தேதி பொம்மிடி மற்றும் கம்பைநல்லூரில் நடைபெறும் திருமண நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தரும் பாமக தலைவர் டாக்டர். அன்புமணி ராமதாஸ் எம்.பி.மற்றும் பசுமைத்தாயகம் தலைவர் சௌமியா அன்புமணி ஆகியோரை தர்மபுரி கிழக்கு மாவட்ட பாமக சார்பில் சிறப்பான வரவேற்பு கொடுக்க வேண்டும். பாமக கிளைக் கழக கூட்டங்கள், திண்ணை பிரச்சாரங்கள் ஆகியவற்றை மேற்கொள்ளுதல், வாக்குச் சாவடி முகவர்களை முழுமையாக நியமனம் செய்து அவர்களுக்கு ஆலோசனை கூட்டம் நடத்துதல், அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதிகளில் சேதமடைந்த கிராம சாலைகள், ஒன்றியச் சாலைகள், மாவட்டச் சாலைகள் மற்றும் மாநிலச் சாலைகள் ஆகியவற்றில் சேதம் அடைந்த சாலைகளை உடனடியாக புதுப்பிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்தில் நிர்வாக குழு உறுப்பினர் ராமலிங்கம், மாவட்ட பொருளாளர் நாகேஸ்வரி, மாநில செயற்குழு உறுப்பினர்கள் ஏ.வி. இமயவர்மன், ஓ.கே. சிவக்குமார், பொதுக்குழு உறுப்பினர் மதியழகன், பசுமை தாயக மாநில துணை செயலாளர் மாது, உழவர் பேரியக்க மாநில துணை தலைவர் சின்னசாமி, டாக்டர் அன்புமணி ராமதாசின் உதவியாளர் சொல்லின் செல்வர், மாவட்ட தலைவர் சபரி, மாவட்ட செயலாளர் ஈஸ்வரன், பசுமை தாயக மாவட்ட தலைவர் வீரமணி, அண்புமணி தங்கைகள் படை மாவட்ட செயலாளர் மகாலட்சுமி, ஒன்றிய செயலாளர்கள் சின்னத்தம்பி, வேடியப்பன், கலைமணி, சின்னராஜ், செல்வம், தம்பிதுரை, ரங்கநாதன், சேகர், சக்திவேல், கோவிந்தன், கிருஷ்ணன், கிருஷ்ணமூர்த்தி, நாராயணன், நகர செயலாளர்கள் கார்த்திக், பெருமாள், சங்கர் மற்றும் பாமக சார்பு அணிகளின் மாவட்ட நிர்வாகிகள் உட்பட பலர் திரளாக கலந்து கொண்டனர். கடத்தூர் நகர செயலாளர் பாரத் பிரின்ஸ் நன்றி கூறினார்.

# பாதாள சாக்கடை அடைப்பை சரி செய்ய மேயர் ஆய்வு




புதுக்கோட்டை, நவ. 10–

புதுக்கோட்டை மாநகராட்சி கல்யாண ராமபுரம் திருச்சி சாலையில் பாதாள சாக்கடை அடைப்பினை செய்ய பொதுமக்கள் அளித்த புகாரின் அடிப்படையில் மேயர் திலகவதி செந்தில் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது பணி விவரங்களை உதவி பொறியாளர் கலியகுமார் விளக்கி கூறினார். நிகழ்வில் வட்டக் கழக செயலாளர் ரங்கராஜ், ஐயப்பன், தோழமைக் கட்சி காங்கிரஸ் நிர்வாகி சிவக்குமார், செல்வகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

# கடையம் தெற்கு ஒன்றிய பாக முகவர்கள் கூட்டம்



கடையம், நவ. 10–

தென்காசி மாவட்டம் கடையம் தெற்கு ஒன்றிய திமுக பாக முகவர்கள் கூட்டம் கடையம் நடராஜ் திருமண மண்டபத்தில் ஒன்றிய கழகச் செயலாளர் ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது. தமிழ்ச்செல்வன் மாவட்ட துணைச் செயலாளர் பெருமாள், மாவட்ட பிரதிநிதி அயன்சாமி, மாவட்ட பிரதிநிதி முன்னிலை வகித்தனர். முகவர் கோபாலகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினர். மாவட்ட கழக செயலாளர் ஜெயபாலன், ஆலங்குளம் தொகுதி பார்வையாளர் மாநில விவசாய தொழிலாளர்கள் இணை செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன் சிறப்புரை யாற்றினர். சுரேஷ் நன்றியுரை யாற்றினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் ரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் பொருளாளர் சுடலைமுத்து, வின்சென்ட் முல்லையப்பன் ,ஒன்றிய துணை செயலாளர் முகமது யாகூப், மாவட்ட பிரதிநிதி அய்யன்சாமி பொன்செல்வன், மாவட்ட பிரதிநிதி சுந்தரி ,மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் அண்ணா தாசன், பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் கருணா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# புதிய பாரதம் எழுத்தறிவுத் திட்ட மையத்தில் இயக்குனர் ஆய்வு



திருவெண்ணெய்நல்லூர், நவ. 10–

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், பெரியசெவலை கிராமத்தில் நடைபெறும் புதிய பாரதம் எழுத்தறிவுத் திட்டம் மையத்தை மதிப்பு மிகு புதிய பாரதம் எழுத்தறிவுத் திட்ட இயக்குனர் முனைவர் நாகராஜ முருகன் ஆய்வு செய்தார். மைய செயல்பாடுகள், பயனாளிகளின் கற்றல் முன்னேற்றம் சார்ந்த அறிவுரைகளை வழங்கினார்கள்.இந்நிகழ்வில் வட்டார வளமைய மேற்பார்வையாளர் காசிநாதன், பெரியசெவலை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் மகேஸ்வரி, ஆசிரியர் பயிற்றுநர் சிவராமன், மைய தன்னார்வலர் சூரியா ஆகியோர் உடனிருந்தார்கள்.

# உத்தரகாண்ட் உதயநாள் விழா கவர்னர் மாளிகையில் கொண்டாட்டம்



புதுச்சேரி, நவ. 10–

கவர்னர் மாளிகையில் உத்தரகாண்ட் மாநிலத்தின் உதயநாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சியில் புதுச்சேரியில் வசிக்கும் உத்தரகாண்ட் மாநிலத்தை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். இந்திய கடலோரக் காவல் படையின் புதுச்சேரி பிரிவு தலைமை இயக்குநர் தசிலா, இந்திய கடலோரக் காவல் படையின் காரைக்கால் கமாண்டர் சவுமே சந்தோலா, புதுச்சேரி பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்று தேச ஒற்றுமை குறித்து விவாதித்தனர்.

விழாவில் கவர்னர் கைலாஷ்நாதன் பேசியதாவது, மத்திய அரசின் ஒரே பாரதம் உன்னத பாரதம் திட்டத்தின் கீழ் நடக்கும் இந்த கொண்டாட்டம் பல்வேறு மாநில மக்களிடையே ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதாக அமைந்திருக்கிறது. இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களின் பண்பாடு, கலை, விளையாட்டு, உணவுமுறை இன்னும் பல நல்ல பழக்கங்களை அறிந்து கொள்ளவும், பகிர்ந்து கொள்ளவும் உதவுகிறது. அனைத்து மக்களிடையே சகோதரத்துவ உணர்வை பலப்படுத்துகிறது.

நம்முடைய ஒன்றுபட்ட வரலாறு, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதன் வெளிப்பாடாக இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது. இவ்வாறு அவர் பேசினார். தொடர்ந்து உத்தரகாண்ட் மாநிலத்தின் பண்பாடு, கலை, வரலாறு ஆகியவற்றை விளக்கும் விதமாக கலை நிகழ்ச்சிகள் நடந்தது.

# விழுப்புரத்தில் ஓடி விளையாடு திட்டத்தை தொடங்கி வைத்த அமைச்சர்

விழுப்புரம், நவ. 10–

விழுப்புரம் மாவட்டத்தில் அரசு ஆரம்ப பள்ளிகளில் ஓடி விளையாடு உடற்கல்வி திட்டத்தினை தொடங்கி வைத்தார். பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பின் மகேஷ் பொய்யாமொழி வனத்துறை அமைச்சர் பொன்முடி மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் பழனி,விழுப்புரம் மாவட்ட பொருளாளர் கௌதம சிகாமணி, விழுப்புரம் எம்எல்ஏ லட்சுமணன், விக்கிரவாண்டி எம்எல்ஏ அன்னியூர் சிவா, ஜெயச்சந்திரன், ஜனகராஜ், புஷ்பராஜ், சர்க்கரை தமிழ்ச்செல்வி பிரபு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



E-mail:maalaiexpresspdy@gmail.com
மாலை எக்ஸ்பிரஸ்
• ஞாயிறு • நவம்பர் 10, 2024

# பனை மரம் காப்போம் விழிப்புணர்வு நிகழ்ச்சி



புதுச்சேரி, நவ. 10–

புதுச்சேரி கனுவாப்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியில் சுற்றுச்சூழல் சங்கம் சார்பாக பனைமரம் எவ்வாறு சுற்றுச்சூழலை பாதுகாக்கிறது என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. பள்ளி அறிவியல் ஆசிரியர் தணிகாசலம் வரவேற்றார். தலைமை ஆசிரியர். திருவரசன் தலைமை உரையாற்றினார். பள்ளி அறிவியல் ஆசிரியை திருமங்கை நோக்க உரையாற்றினார். பனைமரம் ஏன் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் பனை மரத்தின் பயன்கள் சுற்றுச்சூழலுக்கு பனைமரம் எந்த அளவுக்கு பயன்படுகிறது என்பதை பூரணாங்குப்பம் பனை ஆனந்தன் மாணவர்களுக்கு விரிவாக எடுத்து கூறினார். நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். ஆசிரியர், புவனாராஜா நன்றி கூறினார் நிகழ்ச்சியை மொழியாசிரியர் நிர்மலா தொகுத்து வழங்கினார், நிகழ்ச்சியின் முடிவில் பள்ளி வளாகத்தை சுற்றி பனை விதை நடப்பட்டது. நிகழ்ச்சியில் தன சுந்தராம் பாள் சாரி பெபுள் சொசைட்டி தன்னார்வலர்கள் டோன் பேஸ்புட் ஸ்டீபன் ராயப்பா, சிறுசேமி ஆலோசகர் பிரசாத், நர்சிங்கேர் நரேந்திரன், பனை ஜூஸ் ராமலிங்கம் ராணி அம்மாள் அறக்கட்டளை விஜய் மற்றும் பாலச்சந்தர், பிரவீன், விமல், எழிலரசன், கோபிநாத், கலந்துகொண்டு பனை மரம் பற்றி சிறப்புரையாற்றினார்கள்.

# புதுச்சேரியில் காலியாக உள்ள
# பணியிடங்களை விரைவில் நிரப்ப வேண்டும்
## வன்னியர் முன்னேற்ற இயக்கம் கோரிக்கை

புதுச்சேரி, நவ. 10–

புதுச்சேரி வன்னியர் முன்னேற்ற இயக்க தலைவர் லிங்குசாமி விடுத்துள்ள அறிக்கை:



புதுச்சேரியில் உள்ள அனைத்து துறைகளிலும் காலியாக உள்ள பணியிடங்களை விரைவில் நிரப்ப வேண்டும். இதற்கான செயல்பாடுகளை புதுச்சேரி அரசு அதிகாரிகளும் மேற்கொள்ள வேண்டும். புதுவையிலே மின்துறையில் அதிகமாக வேலையாட்கள் கிடையாது. துறையில் ஆட்கள் நிரப்ப வேண்டும். மற்றும் பொதுப்பணி துறையில் ஆட்கள் குறைவாக உள்ளதாக இருக்கிறது. அங்கேயும் ஆட்களை நிரப்ப வேண்டும். கல்வி துறையிலும் ஆட்களை நிரப்ப வேண்டும். இது போன்ற அரசு அனைத்து துறைகளிலும் குறிப்பாக 12,500 பேர் பணியிடங்கள் காலியாக உள்ளதாக நினைக்கின்றேன். ஆகவே புதுவை அரசனது உடனடியாக காலி பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலமாக அனைத்து தொகுதி இளைஞர்களுக்கும் வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. இந்த வேலை வாய்ப்பை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நிரப்ப வேண்டும்.

# உரிமம் பெறாத கடைகளுக்கு ‘சீல்’ உழவர்கரை ஆணையர் எச்சரிக்கை

புதுச்சேரி, நவ. 10–

வணிக உரிமம் பெறாத கடைகளுக்கு சீல் வைக்கப்படும் என உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ்ராஜ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, உழவர்கரை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வணிக உரிமம் பெறாமல் எந்த ஒரு வணிகம், தொழிற்சாலைகள், கிளினிக், பெட்டிக்கடை, நிதி நிறுவனம் நடத்தக் கூடாது. அப்படி உரிமை பெறாமல் நடத்தப்படும் வணிக வளாகம், தொழிற்சாலைகளுக்கு சீல் வைப்பதற்கு, புதுச்சேரி



நகராட்சி சட்டம் வழிவகை செய்துள்ளது.

அதன்படி, வணிகம் உரிமம் பெறாத வணிகர்களுக்கு 7 நாட்களுக்குள் நோட்டீஸ் கொடுத்து சீல் வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, வணிக உரிமம் பெறாத வணிகர்கள் நகராட்சியை அணுகி உரிமம் பெற வேண்டும். எந்தந்த வணிகத்திற்கு உரிமம் பெற வேண்டும், கட்டண விபரங்கள், உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவை www.oulmun.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

வணிகர்கள் தங்களது விண்ணப்பங்களை www.lgrams.py.gov.in என்ற இணையதளத்திலும் சமர்ப்பிக்கலாம்.

வணிக உரிமம் பெறுவதில் சிரமம் இருந்தால், ஜவகர் நகரில் உள்ள அலுவலகத்தில் உள்ள உதவி மையம் அல்லது 7598171674 என்ற வாட்ஸ்அப் எண்ணில் தகவல் தெரிவிக்கலாம். இவ்வாறு செய்திகுறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# இல்வச அரிசி, சர்க்கரை வழங்கல்



புதுச்சேரி, நவ. 10–

கடந்த ஆட்சியில் பல்வேறு காரணங்களால் ரேஷன் கடைகள் மூடிக் கிடந்தன. ரேஷன் கடைகளை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் திறப்போம் என்ற பாரதிய ஜனதா கட்சியின் தேர்தல் அறிக்கையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக நெல்லித்தோப்பு தொகுதியில் சக்தி நகர், காராமணி குப்பம், பிள்ளை தோட்டம் போன்ற பகுதிகளில் ரேஷன் கடைகளை திறந்து சர்க்கரை, அரிசி பொது மக்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நெல்லிதோப்பு தொகுதி பாரதிய ஜனதா கட்சி தலைவர் உமாபதி, துணைத் தலைவர் சண்முகம் சக்தி நகர் பகுதியில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் ரேஷன் பொருட்களை பார்வையிட்டார். மேலும் என்டிஏ கூட்டணி அரசுக்கும் பாரதிய ஜனதா கட்சிக்கும், பொதுமக்கள் சார்பாக பாரதிய ஜனதா கட்சி நெல்லிதோப்பு தொகுதி சார்பாகவும் நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

# மணவெளி தொகுதியில் பயனாளிகளுக்கு அரிசி, சர்க்கரை வழங்கல்
## சபாநாயகர் செல்வம் துவக்கி வைப்பு



புதுச்சேரி, நவ. 10–

புதுச்சேரி மக்களுக்கு அனைத்து ரேஷன் கார்டுகளுக்கும், 10 கிலோ அரிசி மற்றும் 2 கிலோ சர்க்கரை இலவசமாக வழங்கப்படும் என முதலமைச்சர் ரங்கசாமி அறிவித்திருந்தார்.

அதன்படி நேற்று மணவெளி சட்டமன்ற தொகுதியில் அனைத்து ரேஷன் கார்டு தாரருக்கும் 10 கிலோ அரிசி மற்றும் 2 கிலோ சர்க்கரை வழங்கும் நிகழ்ச்சியை பூரணாங் குப்பம், புதுக்குப்பம், நல்லவாடு, ஆண்டியார் பாளையம், தவளக்குப்பம், நோணாங்குப்பம், மணவெளி ஆகிய பகுதிகளில் உள்ள ரேஷன் கடைகளில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டப்பேரவை தலைவருமான செல்வம், துவக்கி வைத்து பயனாளிகளுக்கு அரிசி மற்றும் சர்க்கரை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் அந்தந்த பகுதியைச் சேர்ந்த பா.ஜ.க., முக்கிய பிரமுகர் கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# உல்லாசத்திற்கு அழைத்த 2 புரோக்கர்கள், 3 அழகிகள் கைது



கோவை, நவ. 10–

கோவை வடவள்ளி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பொம்மனாம்பாளையம் பகுதியில் ஒரு வீட்டில் இரண்டு புரோக்கர்கள் மற்றும் மூன்று அழகிகள் உல்லாச விடுதி நடத்தி வந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது. மருதமலை அடிவாரத்தில் ஹோட்டல் நடத்திவரும் ராம்குமார் என்பவர் சம்பவத்தன்று தொண்டாமுத்தூர் காய்கறி மார்க்கெட் செல்லும் வழியில் ஓனம்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகில் முன்பின் தெரியாத ஜெயந்த் என்ற நபர் தன்னிடம் அறிமுகமாகி பொம்மானாம்பாளையம் பகுதியில் உல்லாச விடுதி நடத்துவதாகவும், ரூ1500 கொடுத்தால் உல்லாசம் அனுபவிக்கலாம் என்று கூறி அழைத்து சென்று ராம்கிராம் என்ற நபரிடம் அழகிகளை காட்டு என்று கூறி சென்றுவிட்டார். அவர் மூன்று அழகிகளை அழைத்து ரூ.1500 கொடுத்தால் இதில் யாருடன் வேண்டுமானாலும் உல்லாசம் அனுபவிக்கலாம் என்று கூறியுள்ளார். ராம்குமார் ஏடிஎம் மில் பணம் எடுத்து வருவதாக கூறிவிட்டு வடவள்ளி காவல்நிலையத்தில் புகார் அளித்ததின்பேரில் வடவள்ளி காவல்நிலைய ஆய்வாளர் பிராங்கிளின் தலைமையில் போலீசார் விசாரணை மேற்கொண்டு 2 புரோக்கர்கள் மற்றும் 3 அழகிகளை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# பனை விதைகளை நடவு செய்த ஆட்சியர்



தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாறாந்தையில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தலைமையில் பனை விதைகளை நட்டு வைத்தனர்.

# பழங்குடியினர்களுக்கு வேலைவாய்ப்புதிறன் வழிகாட்டுதல் நிகழ்வு

ஈரோடு, நவ. 10–

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைமற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து பழங்குடியினர் ஆய்வு மையம் மூலம் பழங்குடியினர்களுக்கு வேலைவாய்ப்புதிறன் வழிகாட்டுதல் நிகழ்வு நடைப்பெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் தமிழ்நாடுதிறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து பழங்குடியினர் ஆய்வுமையம் மூலம் ஈரோடு மாவட்டத்தில் வசிக்கும் பழங்குடியினர்களுக்கு வேலைவாய்ப்பு திறன் வழிகாட்டுதல் நிகழ்வு, பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் அண்ணாதுரை தலைமையில் சத்தியமங்கலத்தில் உள்ள பண்ணாரி அம்மன் தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெற்றது.

இம்முகாமில் ஈரோடு மாவட்டத்தில் வசிக்கும்





பழங்குடியினத்தை சேர்ந்த மாணவ, மாணவிகள் மற்றும் அரசு சாரா தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தியதின் பேரில் மாணவர்கள் பங்கேற்றனர். மலும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற 25 மாணவிகள் நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் அமைந்துள்ள சென்னை கிறிஸ்த்துவ கல்லூரியின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள சமூதாய கல்லூரியில் செவிலியர் உதவியாளர் படிப்பில் சேர்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஈரோடு மாவட்டத்தில் படித்த பழங்குடியினர் இளைஞர்களுக்கு வழிகாட்டுதல் நிகழ்ச்சியின் மூலம் முன்னனி நிறுவனங்களில் தங்கும் மற்றும் உணவுவசதியுடன் திறன் பயிற்சி அளிக்கப்பட்டு, பழங்குடியினர் இளைஞர்களுக்கு இந்திய மற்றும் பன்னாட்டு தொழில் நிறுவனங்களில் பணியமர்த்தப் படவுள்ளார்கள். இதன் மூலம் பழங்குடியினர் இளைஞர்களின் பொருளாதாரம் தன்னிறைவு அடைந்து, இவர்கள் மற்றபழங்குடியின இளைஞர்களுக்கு முன்மாதிரியாக திகழ்வார்கள்.

பழங்குடியினருக்கான இம்முகாமில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அலுவலர் ராஜகோபால், பழங்குடியினர் ஆய்வு மைய இயக்குநர் முனைவர் உதயகுமார், திட்ட மேலாளர் பொன்வைத்தியநாதன் உட்படதனியார் தொண்டு நிறுவனங்களை சேர்ந்த பிரதிநிதிகள், சமுதாயதலைவர்கள் மற்றும் வேலைவாய்ப்பு வழங்கும் தனியர் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

# ஆன்மீக நூல் வெளியீட்டு விழா



புதுச்சேரி, நவ. 10–

புதுச்சேரி மாநிலம் முத்திரைபாளையத்தில் அமைந்துள்ள ஸ்ரீவரதராஜ பெருமாள் கோவிலில் பெருமாளுக்கு சிறப்பு ஆராதனை மற்றும் அன்னதானத்துடன் திருமாலின் ஆயிரம் திருநாமங்கள் விஷ்ணு சஹஸ்ர நாமம் என்ற நூலை சமஸ்கிருதத்திலிருந்து அனைத்து மக்களுக்கு புரியும் படி எளிமையான தமிழில்படிக்க தொகுத்து ராமராஜா ஆத்மஞான போதர் திருகரங்களால் 200க்கும் மேற்பட்ட மக்களுக்கு நூல் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை ஆத்மஞான ஆலய நிர்வாகிகள் மற்றும் கோயில் நிர்வாகத்தினர் மற்றும் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# மதுரையில் அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு குழு கூட்டம்



மதுரை, நவ. 10-

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் குழுதலைவர் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்ததாவது: மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும், ஒன்றிய அரசின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும் ஆய்வு செய்து பொது மக்களுக்கு அரசின் திட்டங்கள் முழுமையாகவும், விரைவாகவும் சென்றடைகின்ற வகையில் இன்றைய தினம் இக்கூட்டம் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. மேலும், இக்கூட்டத்தில் 42க்கும் மேற்பட்ட துறைகளில் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்களை ஆய்வு செய்து அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்கப் பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தைப் பொருத்தமட்டில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் தொடர்ந்து சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இக்கூட்டத்தின் போது பல்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்படும் பொருண்மைகள் அடுத்து நடத்தப்படும் இக்கூட்டத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து விவாதிக்கப்படும். தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும் மதுரை மாவட்ட மக்களுக்கு முறையாக கொண்டு சேர்க்கும் வகையில் செயலாற்றி வருகின்றோம்.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு மக்களுக்காக செயல் படுத்தப்படும் திட்டங்களை உடனடியாக செயல்படுத்துவதோடு, அத்திட்டங்களின் பயன்கள் மக்களை சென்று சேருவதில் தேக்கநிலை இருந்தாலும் அவற்றையும் சரி செய்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு செயலாற்றி கொண்டிருக்கின்றோம். இக்கூட்டத்தில் விவாதிக்கப் பட்ட குறைகளையெல்லாம் அந்தந்த துறைகளின் அலுவலர்கள் உடனடியாக அக்குறைகளின் மீது உரிய நடவடிக்கை எடுத்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், குழுதலைவர் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் தெரிவித்ததாவது: தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் முழுமையாக சென்று சேருகிறதா என்பதை ஆராய்வதற்காக இந்திய அரசியல் சாசனத்தால் உருவாக்கப்பட்ட அமைப்பு மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு அமைப்பாகும். தேர்வு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் அனைவரும் ஒருங்கிணைந்து ஒரு அமர்வில் அமர்ந்து அரசின் திட்டங்கள் குறித்தும், அமலாக்கம் குறித்தும், செயலாக்கம் குறித்தும் விவாதிப்பது என்பது ஜனநாயகத்தின் முக்கியமான செயலாகும்.

மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்த கூட்டமாக கருதப்படுகிறது. ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு மாநில அரசு மூலம் ஒருங்கிணைந்து செயல் படுத்தப்பட்டு, மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது. குறிப்பாக, அரசின் திட்டங்கள் முறையாக செல்படுத்தப்படுகிறதா, உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறதா என்பது குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப் படுகிறது. இத்தகைய திட்டங்களை செயல்படுத்துவதில் ஏற்படும் சிரமங்களை ஆராய்ந்து அவற்றை சரிசெய்வதற்கும், அரசு திட்டங்களின் நோக்கத்திற்கு ஏற்றபடி முறையாக பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்வதற்க்கு இந்த கூட்டம் நடைபெறுகிறது என மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மதுரை மாநகராட்சி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வேளாண்மைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், சுகாதாரத்துறை, ரயில்வே துறை, பொதுப்பணித்துறை, தொல்லியல் துறை, பள்ளிக்கல்வித் துறை, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் என 42 துறைகள், அரசு திட்டங்கள் குறித்தும், அரசின் புதிய திட்டப் பணிகள் அறிவிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

இக்கூட்டத்தில், குழு இணைத்தலைவர் தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், குழு இணைத்தலைவர் விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் பா.மாணிக்கம் தாகூர், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகர காவல் ஆணையாளர் முனைவர்.ஜெ.லோகநாதன், மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கே.அரவிந்த், மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ் குமார், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் பி.அய்யப்பன், மாவட்ட வருவாய் அலுவலர் ர.சக்திவேல் உதவி ஆட்சியர் (பயிற்சி) வைஷ்ணவி பால், மாவட்ட ஊராட்சித் தலைவர் சூரியகலா கலாநிதி, மாநகராட்சி துணை மேயர் தி.நாகராஜன் உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை சார்ந்த மக்கள் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

# காரைக்காலில் வரும் 15ந் தேதி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்ப்பு முகாம்

## தாசில்தார் பொய்யாதமூர்த்தி அறிவிப்பு

காரைக்கால், நவ. 10-

காரைக்காலில் வரும் 15ந் தேதி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், மாதாந்திர பொது மக்கள் குறைதீர்ப்பு முகாம் நடைபெறவுள்ளதாக, தாசில்தார் பொய்யாத மூர்த்தி அறிவித்துள்ளார்.

காரைக்கால் தாசில்தார் பொய்யாதமூர்த்தி, இது குறித்து வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: புதுச்சேரி கவர்னர் மற்றும் முதலமைச்சர் அறிவுறுத்தலின் பேரில், காரைக்கால் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், ஒவ்வொரு மாதமும் 15ந் தேதி மக்கள் குறைதீர்ப்பு முகாம் நடைபெற்று வருகிறது. இம்மாதம் மக்கள் குறைதீர்ப்பு முகாம், வருகிற 15ந் தேதி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் மாவட்ட கலெக்டர் மணிகண்டன் தலைமையில், அனைத்து அரசுத்துறை அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர். காலை 9.30 மணி முதல், பிற்பகல் 12 மணி வரை நடைபெறும் இம்முகாமில், அனைத்து பொதுமக்களும் கலந்துகொண்டு தங்கள் குறைகளை தெரிவித்து தீர்வு காணவேண்டுகிறோம். இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# தொழில்நுட்பப் பணி எழுத்துத்தேர்வு மையத்தில் ஆட்சியர் ஆய்வு



சேலம், நவ. 10-

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வு நடைபெறும் தேர்வு மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த தொழில் நுட்பப் பணிகள் தேர்வுக்கான எழுத்துத்தேர்வு நடைபெறும் மையங்களின் ஒன்றான சேலம், கொண்டப்ப நாயக்கன்பட்டி, விநாயகா மிஷன் பார்மஸி கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் பிருந்தாதேவி, ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சார்பில் நடத்தப் படும் ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகளுக்கான (பட்டயம் தொழிற்பயிற்சி நிலை) தேர்வு சேலம் மாவட்டத்தில் உள்ள சேலம், சேலம் மேற்கு மற்றும் சேலம் தெற்கு ஆகிய வட்டங்களுக்குட் பட்ட தேர்வு மையங்களில் அமைக்கப்பட்டுள்ள 10 தேர்வுக் கூடங்களில் இன்று நடைபெற்றது.

சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தொழில் நுட்பப் பணிகளுக்கான (பட்டயம் தொழிற்பயிற்சி நிலை) தேர்வு எழுத 2,682 தேர்வர்கள் விண்ணப்பித் திருந்தனர். தேர்வினை, விண்ணப்பித்த 2,682 தேர்வர்களில் 1,570 தேர்வர்கள் தேர்வு எழுத வருகைபுரிந்திருந்தனர். மேலும், பிற்பகல் நடைபெற்ற தாள் ஐஐ கணினி வழித் தேர்விற்கு அனுமதிக் கப்பட்ட 1,154 தேர்வர்களில் 715 தேர்வர்கள் தேர்வு எழுதினர். இத்தேர்வினை கண்காணிப்பதற்காக 10 தலைமை கண்காணிப் பாளர்களும், 6 நடமாடும் கண்காணிப்புக் குழுக்களும் பணியில் ஈடுபட்டனர். மேலும், தேர்விற்கான அனைத்து ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டும் பல்வேறு நிலையிலான அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டு, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்ீவாணையத்தின் விதிமுறைக்கேற்ப வினாத்தாள் வழங்குதல், விடைத்தாள் வழங்குதல், விடைத்தாள்களை சேகரித்தல், தேர்வு எழுதும் நேரம் மற்றும் தேர்வு எழுதுபவர்களின் நுழைவுச் சீட்டு ஆகியவற்றை சரிபார்த்தல் போன்ற பல்வேறு பணிகள் முறையாக மேற்கொள்ளப் பட்டதை உறுதி செய்யும் வகையில் இன்று காலை சேலம், கொண்டப்ப நாயக்கன் பட்டி, விநாயகா மிஷன் பார்மஸி கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

# சட்டமன்ற பேரவை பொது நிறுவனங்கள் குழு வருகை தொடர்பாக முன்னேற்பாடு பணி ஆலோசனை கூட்டம்



கடலூர், நவ. 10-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பொது நிறுவனங்கள் குழு 2024-25 வருகை தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துதுறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபிஆதித்யா செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, சட்டமன்ற பேரவையின் பொது நிறுவனங்கள் குழு வருகின்ற 13.11.2024 அன்று கடலூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ள உள்ளனர். சட்டமன்ற பேரவையின் பொது நிறுவனங்கள் குழுத்தலைவர் நந்தகுமார் தலைமையில் உறுப்பினர்கள் காந்திராஜன், செல்வபெருந்தகை, அன்பழகன், அசோகன், ஆனந்தன், ஈஸ்வரன், உடுமலை ராதாகிருஷ்ணன், கடம்பூர்ராஜீ, கிரி, கோவிந்தசாமி, துரை.சந்திரசேகரன், சிந்தனைசெல்வன், நாகைமாலி, பிரகாஷ், டாக்டர்சி விஜயபாஸ்கர், வேலு, ஜவாஹிருல்லா ஆகியோர் அடங்கிய குழுவினர் வருகைதர உள்ளனர்.

இக்குழுக்கூட்டம் 13.11.2024 அன்று மாலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறவுள்ளது. ஆய்வின்போது தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக்கழகம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு மீன்வள மேம்பாட்டுக்கழகம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் போன்ற துறைகளின் செயல்பாடுகளில் குழுவினரால் ஆய்வு செய்யப்படவுள்ளது.

சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் தங்கள் மேற்கொண்டிருக்கும் பணிகள் குறித்தும், முடிந்த, நிலுவையிலுள்ள பணிகள் குறித்த தரவுகளுடன் ஆலோசனைக்கூட்டத்தில் பங்கேற்க வேண்டும். தமிழ்நாடு சட்டமன்றக்குழு ஆய்வு பயணத்தின்போது பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட அலுவலர்கள் சிறப்பு கவனம் செலுத்தி பணியாற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாநகராட்சி ஆணையாளர் அனு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் சரண்யா, மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ரவி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) சிவக்குமார் உட்பட துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# ராஜராஜ சோழன் சிலைக்கு மாலை




கும்பகோணம், நவ. 10-

அகல பாரத இந்து மகா சபா சார்பில் மாநில பொதுச் செயலாளர் ராம நிரஞ்சன் ராஜராஜசோழனின் 1039 சதய விழா முன்னிட்டு சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து வணங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் இந்து மக்கள் கட்சியின் மாநில இளைஞரணி பொதுச் செயலாளர் பெரிய கோவில் கார்த்தி, இந்து மகா சபாவின் தஞ்சை மாவட்ட பொதுச்செயலாளர் தட்சிணாமூர்த்தி, மாவட்ட செயலாளர் ஸ்தபதி நடராஜன், குடந்தை நகரச் செயலாளர் சூர்யா பிரகாஷ், ஆலய பாதுகாப்பு பிரிவு நகரச் செயலாளர் நிர்மல், தஞ்சாவூர் நகர செயலாளர் ராஜசேகரன், இந்து மக்கள் கட்சியின் நகர இளைஞரணி செயலாளர் டெல்டா மணிகண்டன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# அரசின் சாதனைகள் புகைப்பட கண்காட்சி



மதுரை மாவட்டம், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், கோவில்பாப்பாக்குடி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக நடைபெற்ற தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பான சிறு புகைப்பட கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# ராஜராஜ சோழன் சிலை ஊர்வலம்



கும்பகோணத்தில் மாமன்னர் ராஜராஜ சோழனின் 1039 சதய விழாவை முன்னிட்டு திருக்கயிலை சிவபூதகண திருக்கூட்ட சிவனடியார்கள் மற்றும் ஆலமர் செல்வன் கருணை மற்றும் கல்வி அறக்கட்டளை இணைந்து நான்காவது ஆண்டாக ராஜராஜ சோழனின் திருவுருவச் சிலை மற்றும் நால்வர் திருவுருவச்சிலையுடன் பன்னிரு திருமுறைகளையும் சிவனடியார்கள் தோளில் சுமந்தபடி ஊர்வலமாக எடுத்து வந்தனர்.

# செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஏரி புனரமைத்தல் ஆலோசனைக்கூட்டம்



**செஞ்சி, நவ. 10-**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பெரு நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதி பங்கேற்புடன் சிறுபாசன ஏரிகளை ஆழப்படுத்தி பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் வகையில் பணிகளை மேற்கொள்வதற்கான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சீத்தாலட்சுமி, முல்லை ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பழனி அனைவரையும் வரவேற்றார்.கூட்டத்தில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கி பெரு நிறுவனங்களின் சமூக பொறுப்புடன் செம்மேடு ஊராட்சி தேவந்தாங்கல் ஏரியை புனரமைத்து பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பயனடையும் வகையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் செம்மேடு ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை மேலாளர் தனபால், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கணேசன், ஊராட்சி ஒன்றிய உதவி பொறியாளர் சதீஷ்குமார், ஊராட்சி மன்ற தலைவர்கள், பணி மேற்பார்வையாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# திமுக பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம்



**செஞ்சி, நவ. 10-**

விழுப்புரம் வடக்கு மாவட்டம்வல்லம் வடக்கு ஒன்றியம் உடையன்தாங்கல், கண்டமநல்லூர், கள்ளப்புலியூர், பெரும்பூண்டி, சோழங்குணம், பென்னகர், தாமனூர் ஆகிய ஊராட்சியின் பாக முகவர்கள் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டம்பென்னகர் ஊராட்சியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வல்லம் வடக்கு ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை தலைமை தாங்கினர். ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், திமுக தேர்தல் பணிக்குழு செயலாளரும், மயிலம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கடலூர் இள.புகழேந்தி ஆகியோர் கலந்துகொண்டு ஓட்டுச்சாவடி பாகம் முகவர்களிடம் கருத்துகளை கேட்டறிந்தார்.

இதைத் தொடர்ந்து திமுக தேர்தல் பணி குழு செயலாளரும், தொகுதிபார்வையாளர் கடலூர் இள. புகழேந்தி பேசுகையில்: கட்சி நிர்வாகிகள் 2026 ஆம் ஆண்டு நடைபெறும் சட்டசபை தொகுதி தேர்தலுக்கு தயாராக இருக்க வேண்டும். ஓட்டு சாவடி பாகம் முகவர்கள் தங்கள் பகுதியில் உள்ள வாக்காளர்கள் பட்டியலில் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். நடைபெற உள்ள வாக்காளர்கள் திருத்தம் சிறப்பு முகாமில் பாகமுகவர்கள் அனைவரும் கலந்துகொண்டு 18 வயது பூர்த்தியடைபவர்கள், வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்களையும், புதியதாக குடிபெயர்ந்த வாக்காளர்களின் பெயர்களையும், புதிய வாக்காளர்கள் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள், மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், சேர்க்கவும் உதவிட வேண்டும்.முதலமைச்சர் குறிப்பிட்டதுபோல நிர்வாகிகள் அடிக்கடி கிராமத்தில் உள்ள மக்களை சந்தித்து அவர்களிடமிருந்து குறைகளை கேட்டு அறிந்து தலைமைக்கு தெரிவிக்க வேண்டும்என அவர் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் மாவட்ட கவுன்சிலர் அன்புசெழியன், ஒன்றிய அவைத்தலைவர் ஏழுமலை, ஒன்றிய துணை செயலாளர்கள் ராஜலிங்கம், மணிமேகலை, ஞான மூர்த்தி, மாவட்ட பிரதிநிதிகள் துரை திருநாவுக்கரசு, ரவிச்சந்திரன், ஒன்றிய பொருளாளர் பெருமாள், மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் அணி அமைப்பாளர் தமிழரசன், ஒன்றிய கவுன்சிலர் கோமதி பிரபாகரன், ஊராட்சி மன்ற தலைவர் ராஜீ, உள்ளிட்ட பாக முகவர்கள், ஊராட்சி கழக நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்





**மதுரை, நவ. 10-**

மதுரை புதூர் பகுதியில் உள்ள மதுரை சமூக அறிவியல் கல்லூரியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மதுரை மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் 100க்கும் மேற்பட்ட முன்னணி தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டன. மதுரை மாவட்டத்திலிருந்து 3000க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பெண்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

முன்னணி நிறுவனங்கள் மூலம் நடைபெற்ற நேர்காணலில் தேர்வு பெற்ற பயனாளிகளுக்கு தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மதுரை மாவட்ட திட்ட இயக்குனர் வானதி பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட உதவி திட்ட அலுவலர்கள் சாகுல் ஹமீது( நிதி – ஆதாரம்), ஜெகதீஸ்வரி ஜோசப்(பயிற்சி) ஜெயராஜ் (வாழ்வாதாரம்) செந்தில்குமார் (நகர்புறம்) மற்றும் வட்டார இயக்க மேற்பார்வையாளர்கள் ஒருங்கிணைப்பாளர்கள் சமுதாய அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தினமும் மாலையில்
மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கம்





கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக, பணியிடங்களில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் தடுப்பு சட்டம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கை, மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு துவக்கி வைத்து உரையாற்றினார்.

# கல்வி கடன் காசோலை வழங்கிய ஆட்சியர்



புதுக்கோட்டை மாவட்டம், கைக்குறிச்சி, பாரதி மகளிர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் கல்விக் கடன் முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா, நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா ஆகியோர் கல்விக் கடனுக்கான காசோலைகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜராஜன்.

# 85 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி அமைச்சர் சக்கரபாணி வழங்கினார்



**கிருஷ்ணகிரி, நவ. 10-**

கிருஷ்ணகிரி மற்றும் காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியங்களில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக ரூ.2 கோடியே 16 லட்சத்து 8 ஆயிரம் மதிப்பிலான வளர்ச்சி திட்ட பணிகளையும், ரூ.13 லட்சத்து 16 ஆயிரம் மதிப்பில் முடிவுற்ற திட்ட பணிகளை துவக்கி வைத்தும், பள்ளிக்கல்வித்துறை சார்பாக 11 ம் வகுப்பு பயிலும் 869 மாணவ, மாணவிகளுக்கு ரூ.41 லட்சத்து 84 ஆயிரத்து 880 மதிப்பில் விலையில்லா மிதிவண்டிகள் மற்றும் பல்வேறு துறைகள் சார்பில் 85 பயனாளிகளுக்கு ரூ.28 லட்சத்து 43 ஆயிரத்து 600 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் சக்கரபாணி, மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு, பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில், எல்லோருக்கும் அரசின் திட்டங்கள் சென்றடைய வேண்டும் என்பதற்காக செயல்பட்டு வருகிறார். மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தை 05.08.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளி கிராமத்தில் துவக்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 5,61,486 பயனாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், விபத்து ஏற்பட்ட முதல் 48 மணி நேரத்திற்குள் கட்டணமில்லா உயிர் காக்கும் அவசர சிகிச்சை வழங்கும் இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 12,115 நபர்களுக்கு ரூ.9 கோடியே 70 லட்சத்து 75 ஆயிரத்து 424 மதிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ், அரசு மற்றும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 57591 நபர்களுக்கு ரூ.89 கோடியே 49 லட்சம் மதிப்பில் காப்பீட்டு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 1,50,000 விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 14,081 பயனாளிகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ், 1 முதல் 5 ம் வகுப்பு வரை பயிலும் 60,845 மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர். புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் கல்லூரிகளில் உயர்கல்வி பயிலும் 6,913 கல்லூரி மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் உயர்கல்வி பயிலும் மாணவிகளின் சதவிகிதம் 34 ஆக உயர்ந்துள்ளது. தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ், மாநிலம் முழுவதும் கல்லூரிகளில் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.360 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 6,270 கல்லூரி மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்படுகிறது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2,94,561 மகளிர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ், 8 லட்சம் வீடுகள் கட்ட முடிவு செய்து இந்த ஆண்டு 1லட்சம் வீடுகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக 3,827 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், பழுதடைந்த தொகுப்பு வீடுகள் பழுதுபார்க்கும் திட்டத்தின் கீழ், ரூ.2 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்து, சுமார் 2 லட்சம் வீடுகள் பழுது பார்க்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

கான்கிரீட் வீடுகளுக்கு ரூ.1 இலட்சத்து 50 ஆயிரமும், ஓட்டு வீடுகளுக்கு ரூ.50 ஆயிரம் வழங்கப்படுகிறது. விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.6 கோடியே 48 லட்சத்து 35 ஆயிரத்து 540 மதிப்பில் 5641 மாணவர்கள், 7814 மாணவிகள் என மொத்தம் 13,455 மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் பயிலும் மாணவர்கள் கடந்த ஆண்டு 10 வகுப்பு தேர்வில் 2வது இடம் பிடித்துள்ளார்கள். இந்த ஆண்டு மாணவர்கள் 10 மற்றும் 12 ம் வகுப்பு பொதுத்தேர்வில் முதலிடம் பிடிக்க மாவட்ட ஆட்சியர், முதன்மைக் கல்வி அலுவலர், ஆசிரிய பெருமக்கள் ஆகியோர் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். மேலும், பெற்றோர்கள் குழந்தை திருமணம் செய்வதை தவிர்த்து, தங்களது குழந்தைகளுக்கு சிறப்பான கல்வியை வழங்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கூட்டுறவு வங்கிகளில் நகைக் கடன் தள்ளுபடி, மகளிர் சுய உதவிக் குழு கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடனுதவி ரூ.12 இலட்சம் வழங்கப்பட்ட நிலையில், தற்போது ரூ.60 இலட்சம் வரை கடன் வழங்கப்பட்டு வருகிறது. முதியோர் உதவித்தொகை ரூ.1000 லிருந்து ரூ.1200 ஆகவும், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை ரூ.1000 லிருந்து ரூ.1500 ஆகவும், மிகவும் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1000 லிருந்து ரூ.2000 மாக வழங்கப்பட்டு வருகிறது. முதல்வரின் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ், 20 ஆயிரம் சாலைகள் மேம்படுத்த ரூ.8 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்து, சாலைப்பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவைகளை பூர்த்தி செய்ய ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் ரூ.8 ஆயிரம் கோடி மதிப்பில் துவக்கி வைக்க உள்ளார்கள். இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை பொதுமக்களுக்கு வழங்கி செயல்படுத்தி வருகிறார் என்றார்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007

# பெருந்தலைவர் காமராஜரை நமக்கு வழங்கியது "விருதுநகர் மண்"–முதல்வர்



# வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு



# மூத்த நடிகர் டெல்லி கணேஷ் காலமானர்


# மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com



• 10-11-2024 ஞாயிற்றுக்கிழமை •வெளியூர்: 11-11-2024 திங்கள்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்